செ.வெ.எண்:10 நாள்: 8.10.2021

## மயிலாடுதுறை மாவட்டத்தில் நாளை மறுதினம் 10.10.2021 அன்று 506 இடங்களில் நடைபெற உள்ள மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 45 ஆயிரம் நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.லலிதா.,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் கலந்து கொண்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது…..

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் எதிர்வரும் 10.10.2021 அன்று 506 இடங்களில் நடைபெறும் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 45 ஆயிரம் நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 9 லட்சத்து 81 ஆயிரத்து 082 மொத்த மக்கள் தொகையில் 18 வயதிற்கு மேற்பட்டோர் 7 லட்சத்து 61 ஆயிரத்து 320 நபர்கள் உள்ளனர். இதில் முதல் தவணை தடுப்பூசி 4 லட்சத்து 14 ஆயிரத்து 991 நபர்களும், இரண்டாம் தவணை தடுப்பூசி 1 லட்சத்து 46 ஆயிரத்து 937 நபர்களும் செலுத்திக்கொண்டுள்ளனர். இன்னும் கொரோனா தடுப்பூசி போடாத 45 சதவீதம் மக்களை தடுப்பூசி போடவைப்பதற்கு பல்வேறு வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்.

பொதுமக்கள் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்வதில் எந்தவித தயக்கமும்மின்றி தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். குறிப்பாக மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள், இரத்தஅழுத்தம், சர்க்கரை வியாதி உள்ளவர்கள் கண்டிப்பாக கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். கொரோனா வைரஸ் தடுப்பூசி போட்டுக்கொள்வதினால் கொரோனா வைரஸ் வருவதும் குறைகிறது, கொரோனா வைரஸ் பரவக்கூடிய தன்மையும் குறைகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் இதுவரை நான்கு மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடத்தி உள்ளோம்.இம்முகாம்களின் மூலம் இதுவரை 1 லட்சத்து 27 ஆயிரம் நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போட்டுள்ளோம். அந்தவகையில் எதிர்வரும் 10.10.2021 அன்று மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடத்த திட்டமிடப்பட்டு அதன்படி ஊராட்சிகளில் 420 இடங்களிலும், பேரூராட்சிகளில் 15 இடங்களிலும், நகராட்சிகளில் 19 இடங்களிலும், 31 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 6 அரசு மருத்துவமனைகளிலும், 15 நடமாடும் கொரோனா தடுப்பூசி குழுக்கள் என மொத்தம் 506 கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடைபெற உள்ளது.

எனவே மயிலாடுதுறை மாவட்டத்து மக்கள் நாளை மறுதினம் நடைபெறும் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப,,அவர்கள் தெரிவித்தார்.